# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.7776/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 22.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எஸ். ரவிவர்மா<br>2டி/1ஏ/2, கணேசா நகர்<br>என்.ஜி.ஒ. காலணி<br>தூத்துக்குடி – 628 008. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>உதவி செயற்பொறியாளர் (கட்டிடங்கள்) அலுவலகம்<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு, உபகோட்டம்<br>திருச்செந்தூர். |

---------

இவ்வாணையத்தில் இன்று (22.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. எஸ். ரவிவர்மா வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. டீ. சங்கர், உதவி செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் வந்திருந்தார்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 05.01.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் திருச்செந்தூர் உபகோட்ட செயற்பொறியாளராக பதவியேற்ற நாளிலிருந்து 31.12.08 வரை தினக்கூலி மற்றும் கைரசீது மூலம் செலவிடப்பட்ட தொகைக்கான விபரம் கோருதல் சம்பந்தமாக தகவல் வழங்குமாறு

விண்ணப்பித்திருந்தார். சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 29.03.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மனுதாரர் வராத நிலையில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை 01.09.2009 அன்று வழங்கியதாகவும், மனுதாரரும் 02.9.09 அன்று கையொப்பமிட்டு தகவலை பெற்றுக் கொண்டதற்கான நகலை இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்ததன் அடிப்படையிலும் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.7776/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
உதவி செயற்பொறியாளர் அலுவலகம்
கட்டுமானம் (ம) பராமரிப்பு
உபகோட்டம்
திருச்செந்தூர்.

திரு. எஸ். ரவிவர்மா
2டி/1ஏ/2, கணேசா நகர்
என்.ஜீ.ஓ. காலணி
தூத்துக்குடி – 628 008.